# கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

### சட்டமாணி சிறப்புப் பட்டக் கற்கை, ஆண்டு I பரீட்சை

### 2ஆம் தவணை - இறுதிப் பரீட்சை – 2023

### LAW 12305 – ஒப்புரவு மற்றும் நம்பிக்கைகள் சட்டம்

(2 மணித்தியாலங்கள் மற்றும் 15 நிமிடங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 04

**ஏதேனும் இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

(தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1) பின்வரும் மரணசாசனங்கள் மூலம் வலிதான நம்பிக்கையொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்ட அதிகாரங்களுடன் ஆராய்க:

அ. அருண் என்பவன் குமார் என்பவனை ரூ. 5 மில்லியனிற்கு நம்பிக்கையாளனாக நியமித்ததுடன் வீடொன்றைக் கொள்வனவு செய்யுமாறும் அருணுடைய மருமகள் அருணுடைய கிராமத்தைச் சேர்ந்தவளாயின் அதை அவளுக்கு அவன் கைமாற்றஞ் செய்யும்படியும் அறிவுறுத்தினான்;

(7 புள்ளிகள்)

ஆ. சமன் என்பவன் அவனது ஓய்வூதிய நிதியினை இந்தியாவிலிருந்து கஞ்சா கடத்துவதில் முதலீடு செய்வதற்கும் இலாபத்தினை அவனுடைய (சமனினுடைய) பிள்ளைகளின் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்குமென நம்பிக்கையொன்றை உருவாக்கினான்.

(7 புள்ளிகள்)

இ. விசாலி என்பவள் அவளது உணவகம் மற்றும் தேயிலைப் பெருந் தோட்டம் ஆகியவற்றை கண்ணன் என்பவனுக்கு கைமாற்றுஞ் செய்ததுடன் மிகவும் பொருத்தமானவர்களென கண்ணன் கருதுகின்ற அவளது சகோதரர்களுடைய பிள்ளைகளுக்கு அவ் ஆதனங்களை பகிர்ந்தளிக்குமாறும் அவனுக்கு அறிவுறுத்தினாள்.

(7 புள்ளிகள்)

ஈ. சாவித்ரி என்பவள் அவளது கடையினை அவளுடைய சகோதரியான சுமனா என்பவளுக்குக் கைமாற்றியதுடன் சாவித்திரியின் மகளான மாலினி என்பவள் பதினெட்டு வயதினை அடைந்ததும் அவளுக்கு அக் கடையினைக் கைமாற்றுஞ் செய்யும்படியும் அறிவுறுத்தினாள். மாலினி பதினெட்டு வயதினை அடைந்த போதிலும் சுமனா அக் கடையினை மாலினிக்கு கைமாற்றுஞ் செய்யாது வைத்துக் கொண்டிருக்கிறாள். நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5(1) இன் கீழான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமையினால் நம்பிக்கையொன்று இல்லை என சுமனா வாதிடுகிறாள்.

(9 புள்ளிகள்)

(மொத்தம் 30 புள்ளிகள்)

2) சிவாவினுடைய பின்வரும் மரணசாசனங்கள் தரும நம்பிக்கைகளை உருவாக்குகின்றனவா என பொருத்தமான தீர்ப்புச்சட்ட மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் மூலம் ஆராய்க:

அ. தரம் 01 இல் உள்ள வறிய மாணவர்களுக்கு சத்தான காலை உணவு வழங்குவதற்கென புனித கிளேயர் பாடசாலையினுடைய விடுதிப் பாதுகாவலருக்கு ரூ. 05 மில்லியன்;

ஆ. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள வறிய பிள்ளைகளின் கல்வியை இயலச் செய்வதற்கு எழுது பொருட்களை வழங்குவதற்கென ரூ. 12 மில்லியன்;

இ. நாட்டிலுள்ள அரசுக்கு சொந்தமான வியாபாரங்களை தனியார் மயமாக்குவதன் நன்மைகள் தொடர்பில் ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கென ரூ. 15 மில்லியன்; மற்றும்

ஈ. எனது கிராமத்திலுள்ள சிவன் கோவிலில் எனது தாயாரின் ஆத்மா சாந்தி அடைவதற்காக வருடாந்தம் பூஜை ஒன்றை நடாத்துவதற்கென எனது மகன் பரன் என்பவனுக்கு ரூ. 5 மில்லியன்.

(7.5×4=30 புள்ளிகள்)

3) "…ஓர் ஆக்க நம்பிக்கை என்பது நம்பிக்கையாளரினுடைய மனசாட்சியற்ற நடத்தையின் காரணமாக அவர் மீது சட்டத்தினால் விதிக்கப்படுகின்ற ஓர் நம்பிக்கையாகும்". (Westdeutsche Landesbank [1996], Lord Browne Wilkinson)

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் IX இன் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் தொடர்புறுத்தி மேலுள்ள கூற்றின் மீது கருத்துரைக்க.

(30 புள்ளிகள்)

4) குமார் என்பவன் அவனது இரு மகன்களான சுராஜ் மற்றும் விராஜ் ஆகியோரின் நன்மைக்காகவென நுவர எலியாவிலுள்ள தனது தேயிலைப் பெருந்தோட்டம் மற்றும் விடுமுறை மாளிகை தொடர்பில் நம்பிக்கையொன்றை உருவாக்கினான். குமார் இந் நம்பிக்கைக்கான கூட்டு நம்பிக்கையாளர்களாக சனேஷ், மிதுன் மற்றும் ரெஹான் ஆகியோரை நியமித்தான். தேயிலைப் பெருந்தோட்டத்திலிருந்தான வருவாய்களை இலங்கைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு நம்பிக்கையாளர்களுக்கு குமார் அதிகாரம் வழங்கியிருந்தான். உயர் இலாபங்கள் மற்றும் உயர் உறுகண்களைக் (risks) கொண்ட நிகழ்நிலை வெளிநாட்டு நாணய வியாபாரம் தொடர்பில் சுராஜ் அறிய வந்தான். தேயிலைப் பெருந்தோட்டத்திலிருந்தான வருவாய்களை குறித்த நிகழ்நிலை வெளிநாட்டு நாணய வியாபாரத்தில் முதலீடு செய்வதற்கு சனேஷையும் மிதுனையும் சுராஜ் இணங்க வைத்தான். குறித்த நிகழ்நிலை வெளிநாட்டு நாணய வியாபாரத்திலான முதலீடு தொடர்பில் ரெஹான் மற்றும் விராஜ் ஆகியோரிடம் வெளிப்படுத்தாதிருக்குமாறு சனேஷையும் மிதுனையும் சுராஜ் வேண்டினான். சுராஜினுடைய திட்டத்திற்கு இணங்குவதற்காக இலாபத்திலிருந்து பங்கொன்றினை சனேஷ் மற்றும் மிதுன் கோரினர். சனேஷ் மற்றும் மிதுனினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு சுராஜ் இணங்கினான். குறித்த நிகழ்நிலை வெளிநாட்டு நாணய வியாபாரத்தில் அவர்கள் பாரிய இழப்பினைச் சந்தித்தனர். சனேஷ் மற்றும் மிதுன் குறித்த விடுமுறை மாளிகையினை நம்பிக்கை தொடர்பில் அறிந்திருந்த அவர்களது நெருங்கிய நண்பனான நிஷால் என்பவனுக்கு விற்றனர். குறித்த விற்பனையானது சுராஜினுடைய சம்மதத்துடன் சந்தைப் பெறுமதியிலும் பார்க்க மிகவும் குறைந்த பெறுமதிக்கு மேற்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து, சனேஷ், மிதுன் மற்றும் சுராஜ் ஆகியோர் குறித்த விற்பனையிலிருந்து கிடைத்ததை பகிர்ந்து கொண்டனர். ரெஹான் அவனுடைய சொந்த வியாபாரத்தில் தீவிரமாக இருந்தமையால் நம்பிக்கையாளனொருவனாக அவனுடைய கடமையில் அலட்சியமாக இருந்தான். விராஜ் நம்பிக்கை சாசனம் மற்றும் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டம் என்பவைகளுக்கு மாறான குறித்த முதலீடுகள் மற்றும் பரிமாற்றங்கள் பற்றி அறிய வந்தான் என்பதுடன் சனேஷ்,

மிதுன், ரெஹான், சுராஜ் மற்றும் நிஷால் ஆகியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கையொன்றை மேற்கொள்ள கருதுகிறான்.

நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டமைகள் மற்றும் அவனுடைய உரிமைகள் தொடர்பில் விராஜ் உமது ஆலோசனையை நாடுகிறான். நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை மேற்கோள்காட்டி விராஜிற்கு ஆலோசனை வழங்குக.

(30 புள்ளிகள்)

*****